**STARTING TIME 11.10 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 121/2019**

Deposition of **D.W.3** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assisatant of this court, on 06.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சசிகலா** Father’s Name :

Address :

Calling : Age :

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5. எனது பாட்டியின் பெட்டியை திறந்து பார்த்தபோது தான் தாவா சொத்துக்கள் சம்மந்தப்பட்ட விவரங்கள் தெரியும் என்று சொல்லியுள்ளதால், அந்த பெட்டியில் என்னென்ன பத்திரங்கள் இருந்தது என்றால், 19.06.1973 அன்று அங்கம்மாள் என்பவர் எனது பெரியப்பா மோகன் மற்றும் தசரதன் என்பவர்கள் பெயருக்கு எழுதி வைத்த உயில் சாசனமும், 1956ம் ஆண்டு கோவிந்தம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரமும், 20.06.1973 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரமும் இருந்தது.

6. 19.06.1973 தேதியிட்ட வா.சா.ஆ–4 உயில் சாசனத்தில் என்னுடைய குமாரர்கள் செல்வராஜ, ருக்மாங்கதன் என்கிற R.K. மோகன் மற்றும் R.K. தசரதன் என எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த உயிலில் எனது தகப்பனார் பெயர்

R.K. தசரதன் என்று மட்டும்தான் உள்ளது என்றும், R.K. தசரதன் என்கின்ற தட்சணாமூர்த்தி என்று இல்லை என்றால், சரிதான்.

7. நான் சொன்ன 1956ம் வருடம் கிரையப்பத்திரத்தில் உள்ள சொத்து தற்போது யார் வசம் உள்ளது என்றால், அந்த சொத்தை 20.06.1973 அன்று எனது தகப்பனாரும், பெரியப்பா மோகன் என்பவரும் வா.சா.ஆ–5 பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்து கொண்டதில் அந்த சொத்து எனது தகப்பனாரின் பாகமாக வந்தது. அந்த பாகபிரிவினையில், கோவிந்தம்மாள் 1956ல் கிரையம் பெற்ற சொத்து மட்டும் எனது தகப்பனாரின் பாகமாக ஒதுக்கப்பட்டதா என்றால், ஆமாம், கிரைய சொத்தும் ஒதுக்கப்பட்டது, உயில் மூலம் வந்த சொத்தும் ஒதுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

ENDING TIME 11.22. A.M.